## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 42/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | ஒன்னேசி கிதியோன் ராஜ் |
| Father Name | : | அந்தோனிராஜ் |
| Village | : | கோவை |
| Taluk | : | கோவை |
| Age | : | 34 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவையில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோனது எனது அப்பா ஆவார். கடந்த 24.12.2024 ஆம் தேதியன்று மாலை 6.15 மணியளவில் தாராபுரம் – காங்கேயம் சாலையில் உள்ள CSI சர்ச் அருகில் எனது அப்பா மேற்கில் இருந்து கிழக்காக மேற்படி சாலையை நடந்து கடப்பதற்காக சாலையின் மேல் புறமாக நின்றுகொண்டிருந்தபோது மேற்படி சாலையில் தெற்கில் இருந்து வடக்காக வந்த அரசுப்பேருந்து மோதி எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அந்த விபத்தில் எனது அப்பாவிற்கு தலையில் பலத்த காயமும், கை, காலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அவரை சிகிச்சைக்காக தனியார் ஆம்புன்ஸ் மூலமாக காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்திருப்பதாகவும், பின்னர் மருத்துவர்கள் பரிந்துரைப்படி அவரை மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் எனது மாமா சின்ன பென்ஜமீன் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அந்த தகவலின் பேரில் நான் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றுபார்த்தேன். எனது அப்பா மயக்க நிலையில் இருந்தார். பின்னர் அன்று இரவு 10.05 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். பின்னர் காங்கேயம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எனது அப்பாவின் பிரேதத்தின் மீது போலீசார்

பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

விபத்தில் இறந்துபோனவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர் வின்சி என்ற சகோதரி ஆவார். நானும் எனது சகோதரியும் கோவையில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் காங்கேயத்தில் தனியாகத்தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு 70 வயது இருக்கும் என்றால் 60 வயது இருக்கும். எனது அப்பாவிற்கு காது கேட்கும் திறன் குறைவாகவும், கண்பார்வை குறைவாக உள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு காது கேட்கும் திறன் சரியாக உள்ளது என்றும், கண்பார்வை சரியாக உள்ளது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. புகாரை நான்தான் எழுதினேன் என்றால் சரிதான். போலீசார் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள் என்றால் சரியல்ல. புகாரில் சம்பவத்தை யாரும் நேரில் பார்த்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மாமா பார்த்ததாக சொல்லியுள்ளேன். மேற்படி தகவலை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் பென்சமீன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் திருநாவுக்கரசு, கதிர்வேல் ஆகியோர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு எனது அப்பாவை யார் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் எனது அப்பாவை சிகிச்சைக்கு அழைத்துவந்தவர் பெயர் பிரபு என்று குறிப்பிட்டுள்ளது அந்த நபர் எனது உறவினர் என்றால் சரிதான். சாட்சிகள் சின்ன பென்ஜமீன், ரமேஷ் ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்டு எனது அப்பாவை காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் வழக்கிற்காக சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார்தான்

ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வயோதிகம் காரணமாக சரியாக சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடந்து சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.03 17:34:06 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 42/2025 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | சின்ன பென்சமீன் |
| Husband Name | : | துரைசாமி |
| Village | : | தாராபுரம் ரோடு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 56 |

Both accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயத்தி குடியிருந்து வருகிறேன். சம்பவத்திற்கு மறுநாள் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நானும், எனது நண்பர் ரமேஷ் ஆகியோர்கள் மாலை 6.15 மணிக்கு தாராபுரம் – காங்கேயம் சாலையில் உள்ள CSI சர்ச் அருகில் முன்பாக நின்று பேசிக்கொண்டிருந்தோன். அப்போது விபத்து ஏற்பட்டதுபோல் சத்தம் கேட்டது. என்ன என்று பார்த்தபோது எனது அக்கா கணவரான அந்தோனிராஜ் மேற்படி சாலையில் மேற்கில் இருந்து கிழக்காக மேற்படி சாலையை நடந்து கடப்பதற்காக சாலையின் மேற்கு புறமாக நின்றுகொண்டிருந்தபோது மேற்படி சாலையில் தெற்கில் இருந்து வடக்காக ஆஜர் எதிரி ஓட்டி வந்த ஈரோடு – பழனி செல்லும் அரசுப்பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதில் எனது அக்காவின் கணவர் கீழே விழுந்தார். அருகில் சென்று நானும், ரமேஸ்யும் பார்த்தபோது அவருக்கு தலையில் பலத்த காயமும், கை காலில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டிருந்தது. தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட தனியார் ஆம்புன்ஸ் மூலமாக காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். ஒன்னேசி கிதியோன் ராஜ்க்கு தகவல் சொன்னேன். பின்னர் மருத்துவர்கள் பரிந்துரைப்படி அவரை மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தோம். பின்னர் அந்தோனிராஜ் அன்று இரவு 10.05 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். பின்னர் எனது அக்காவின்

கணவர் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த அந்தோனிராஜ் எனது அக்காவின் கணவர் என்றால் சரிதான். அவருக்கு 70–75 வயது இருக்கும் என்றால் சரிதான். அந்ததோனிராஜ்க்கு காது கேட்கும் திறன் குறைவாக உள்ளது என்றால் ஒருபக்கம் காது கேட்கும் திறன் மட்டும் குறைவாக உள்ளது. பார்வை திறன் குறைவாக உள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த அந்தோனிராஜ் என்ன வேலை செய்துகொண்டிருந்தார் என்றால் பழைய பேப்பர், நோட் ஆகியவற்றை வீடுகளில் இருந்து வாங்கும் வேலை செய்து வந்தார். அந்தோனி ராஜ் இதற்கு முன்பே பலமுறை சாலையை கடக்கும்போது விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. ஒரே ஒருமுறைதான் அவருக்கு விபத்து ஏற்பட்டது. விபத்தை நானும், ரமேஷ்யும் சத்தம் கேட்டுத்தான் திரும்பிபார்த்தோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகே சாலையின் நடுவில் டிவைடர் மற்றும் சிறிய அளவு வழி உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த அந்தோனிராஜை யார் யார் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் நானும், ரமேஷ்யும் மற்றம் சம்பவ இடத்தின் அருகே இருந்த சில நபர்கள் வந்தார்கள். அவர்கள் பெயர்கள் தெரியாது. எங்களுடன் வந்த மற்ற நபர்கள் எங்களது ஊர்க்காரர்கள் என்றால் சரியல்ல. உடன் வந்த நபர்கள் பற்றிய விபரத்தை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடமானது போக்குவரத்து நெரிசல் மிகுந்த ரோடு என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் அருகே நிறைய கடைகள் வீடுகள், சர்ச் உள்ளது என்றால் சரிதான். இதற்கு பின்னிட்டு சம்பவ இடத்தின் அருகே இருந்த கடைகள் மற்றும் வீடுகளில் உள்ள நபர்கள் வந்து பார்த்தார்கள் என்றால் கூட்டம் கூடிவிட்டது. அவர்கள் பற்றிய விபரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சயிம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சாலையில் பாதசாரிகள் ரோட்டை கடக்க ஜீப்ரா கிராஸிங் உள்ளது என்றால் இல்லை. எனது அக்கா கணவர்தான் ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வயோதிகம் காரணமாக சரியாக சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையின் நடுவே உள்ள சிறிய வழியில் செல்லவேண்டி சாலையை கடந்து சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.03 17:34:14 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 42/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | ரமேஷ் |
| Father Name | : | ஆறுமுகம் |
| Village | : | களிமேடு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 46 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது களிமேட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.12.2024 ஆம் தேதியன்று மாலை 6.15 மணியளவில் தாராபுரம் – காங்கேயம் சாலையில் உள்ள CSI சர்ச் அருகில் முன்பாக நின்று நானும், சின்னபென்சமீனும் பேசிக்கொண்டிருந்தோன். அப்போது விபத்து ஏற்பட்டதுபோல் சத்தம் கேட்டது. என்ன என்று பார்த்தபோது எனது பெரியப்பா அந்தோனிராஜ் மேற்படி சாலையில் மேற்கில் இருந்து கிழக்காக மேற்படி சாலையை நடந்து கடப்பதற்காக சாலையின் மேற்கு புறமாக நின்றுகொண்டிருந்தபோது மேற்படி சாலையில் தெற்கில் இருந்து வடக்காக வந்த ஈரோடு – பழனி செல்லும் அரசுப்பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதில் எனது பெரியப்பா கீழே விழுந்தார். அருகில் சென்று நானும், சின்ன பென்சமீன் சென்று பார்த்தபோது அவருக்கு தலையில் பலத்த காயமும், கை காலில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டிருந்தது. தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட தனியார் ஆம்புன்ஸ் மூலமாக காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். ஒன்னேசி கிதியோன் ராஜ்க்கு தகவல் சொன்னோம். பின்னர் மருத்துவர்கள் பரிந்துரைப்படி அவரை மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தோம். பின்னர் எனது பெரியப்பா அந்தோனிராஜ் அன்று இரவு 10.05 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்த அந்தோனிராஜ் எனது பெரியப்பா என்றால் சரிதான். அவருக்கு 70-75 வயது இருக்கும் என்றால் 60 வயது இருக்கும். அந்ததோனிராஜ்க்கு காது கேட்கும் திறன் குறைவாக உள்ளது என்றால் சரிதான். பார்வை திறன் குறைவாக இருந்தது என்றால் சரிதான். விபத்தில் இறந்த அந்தோனிராஜ் என்ன வேலை செய்துகொண்டிருந்தார் என்றால் பழைய பேப்பர், நோட் ஆகியவற்றை வீடுகளில் இருந்து வாங்கும் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். அந்தோனி ராஜ் இதற்கு முன்பே பலமுறை சாலையை கடக்கும்போது விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தை நானும், சின்ன பென்சமீனும் சத்தம் கேட்டுத்தான் திரும்பிபார்த்தோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகே சாலையின் நடுவில் டிவைடர் மற்றும் சிறிய அளவு வழி உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த அந்தோனிராஜை யார் யார் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் நானும், சின்னபென்சமீன் மட்டும்தான் கூட்டிச்சென்றோம். வேறு நபர்கள் யாரும் இல்லை. சம்பவ இடமானது போக்குவரத்து நெரிசல் மிகுந்த ரோடு என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகே நிறைய கடைகள் வீடுகள், சர்ச் உள்ளது என்றால் சரிதான். இதற்கு பின்னிட்டு சம்பவ இடத்தின் அருகே இருந்த கடைகள் மற்றும் வீடுகளில் உள்ள நபர்கள் வந்து பார்த்தார்கள் என்றால் கூட்டம் கூடிவிட்டது. அவர்கள் பற்றிய விபரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சாலையில் பாதசாரிகள் ரோட்டை கடக்க ஜீப்ரா கிராஸிங் உள்ளது என்றால் இல்லை. எனது பெரியப்பாதான் ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வயோதிகம் காரணமாக சரியாக சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையின் நடுவே உள்ள சிறிய வழியில் செல்லவேண்டி சாலையை கடந்து

சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.03 17:34:22 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்